**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020
Prosecution witness for P.W.6

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.தனபால் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.10.2025.

Accused are present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குருவிக்குளத்தில் குடியிருந்து வேலை தேடி வருகிறேன். இறந்து போன ராமநாதனை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில் 31.03.2019 அன்று பிற்பகல் 2.45 மணியளவில் கோவில்பட்டி AKS திரையரங்கம் அருகில் அரசு மதுபான கடை முன்பாக 1ம் எதிரியும் இளஞ்சிறார் எதிரியும் மற்றும் இறந்து போன ராமநாதனும் நின்று கொண்டிருந்த போது நான் ஊருக்கு வரவில்லையா என்று கேட்டதாகவும் அதற்கு அவர்கள் முக்கியமான வேலை இருப்பதாகவும் நீ போ என்று என்னை பார்த்து சொன்னதாகவும் பின்னர் ராமநாதன் ஊருக்கு வரவில்லை என்றும் 12.04.2019 அன்று பகல் 11.30 மணியளவில்

கல்லூரானி பெரிய பாலம் ஓடைக்கு அருகில் ஒரு நபர் இறந்து கிடப்பதாக அ.சா.1 என்னிடம் சொன்னதாகவும் உறவினர்களுடன் சென்று பார்த்தபோது இறந்து போன நபர் ராமநாதன் என்று உறுதி செய்ததாகவும் அதற்கு காரணம் 1ம் எதிரி 2ம் எதிரியுடன் தவறான தொடர்பு வைத்திருந்த காரணத்தால் 1ம் எதிரி மேற்படி ராமநாதனை கொன்று விட்டதாக நான் கேள்விப்பட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும் தற்போது 1ம் எதிரிக்கு பயந்து கொண்டும் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

I Additional District& Sessions Judge,
Thoothukudi.